**கல்முனை மாநகர சபை**

**அம்பாறை மாவட்டம்**

## 1. நிதிசார் கூற்றுக்கள்

### 1.1 நிதிசார் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2012 ஏப்ரல் 18 ஆந் திகதியன்றும் முன்னைய ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2012 ஜனவரி 05 ஆந் திகதியன்றும் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டன. மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2012 ஆகஸ்ட் 14 ஆந் திகதியன்று மாநகர முதல்வருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் எனக்கு வழங்கப்பட்ட சிறந்த தகவல்கள் மற்றும் விளக்கங்களுக்கமைய, கல்முனை மாநகர சபை 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முறையான கணக்குப் பதிவேடுகளை பேணியிருந்தது என்றும், எனது அறிக்கையில் காட்டப்பட்டுள்ள விடயங்களால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களை தவிர, 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கல்முனை மாநகர சபையின் நிலைவரத்தையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நிதி விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும், நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தும் விதத்தில் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.3 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) நிலையான சொத்துக்கள் ரூபா 650,817 குறைத்துக் கூறப்பட்டிருந்தன.

(ஆ) 2011 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான பொதுக் களஞ்சியங்களின் பெறுமதி நேரடி சரி, பிழை பார்க்கப்பட்ட பெறுமதியில் அல்லாது புத்தகப் பெறுமதியிலேயே காட்டப்பட்டிருந்தன.

(இ) நிதிசார் கூற்றுக்களில் காட்டப்பட்ட ரூபா 136,194,774 கூட்டுத் தொகையுடைய நடைமுறை அல்லாத சொத்துக்களின் பெறுமதி புத்தகப் பெறுமதியின் அடிப்படையிலேயே அமைந்திருந்தன. மீளாய்வாண்டின்போது இச் சொத்துக்கள் நேரடியாகச் சரி, பிழை பார்க்கப்படவில்லை.

(ஈ) நிதிசார் கூற்றுக்களில் கணக்காய்வுக் கட்டணத்திற்கான நிதியேற்பாடு ரூபா.35,790 குறைத்துக் கூறப்பட்டிருந்தது.

(உ) நிதிசார் கூற்றுக்களில் நிலையான சொத்துக்களை மீளவமைப்பதற்கான நிதியேற்பாடு மேற்கொள்ளப்படவில்லை.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமாப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்களின் பிரகாரம், மாநகர சபையின் 2011 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான மீண்டுவருஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 8,070,478 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவருஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 3,557,481 ஆகும்.

### 2.2 சட்டங்கள், விதிகள் போன்றவற்றுடன் இணங்காமை

**பின்வரும் இணங்காமை அவதானிக்கப்பட்டன.**

(அ) 2011 ஆகஸ்ட் 06 ஆந் திகதிய எல்ஏஈ/2011/4(3) ஆம் இலக்க தேர்தல்கள் ஆணையாளரது சுற்றறிக்கைக்கு முரணாக ரூபா 224,778 பெறுமதியான வீதி விளக்குகள் மாநகர சபை அங்கத்தவர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) 2008 பெப்ரவரி 01 ஆந் திகதிய 1534/18 ஆம் இலக்க சுற்றாடல் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்களின் பிரகாரம் ரூபா 12,544 வருவாயைச் சேகரிப்பதற்கு மாநகர சபை நடவடிக்கை எடுக்கவில்லை.

### 2.3 வருவாய் நிர்வாகம்

#### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளபடியான வருவாய், வருவாய் நிலுவை என்பன

மாநகர முதல்வரால் மீளாய்வாண்டின் பொருட்டுச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளபடியான வருவாய், வருவாய் நிலுவை என்பன தொடர்பான தகவல்கள் கீழே காணப்படுகின்றன.

| | வருவாய் விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளபடியானது | டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 |
| (i) | தீர்வையும் வரியும் | 10,153 | 10,223 | 80,492 |
| (ii) | குத்தகை வாடகை | 13,578 | 11,514 | 29,253 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணம் | 2,030 | 1,819 | - |
| (iv) | பிற வருவாய் | 13,982 | 1,072 | - |

### 2.3.2 நீதிமன்றத் தண்டப்பணமும் முத்திரைக் கட்டணமும்

மாகாண சபையின் தலைமைச் செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகள் ஆகியோரிடமிருந்து 2011 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய தொகை பின்வருமாறு.

| | | ரூபா |
|---|---|---|
| (i) | நீதிமன்றத் தண்டப்பணம் | 3,363,017 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 9,677,290 |

### 2.3.3 பெறவேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

#### (அ) மதிப்பீட்டு வரி

i. மதிப்பீட்டு வரி நிலுவையான ரூபா 80,492,372 சேகரிக்கப்படுவதற்கான நடவடிக்கை நெடுங்காலமாக மேற்கொள்ளப்படவில்லை.

ii. நிலுவையை அறவிடாது, வரி செலுத்துவோர் அநேகரது பெயர்கள் மதிப்பீட்டு வரி தொடர்பான கணனி முறைமையில் மாற்றத்திற்குள்ளாகியிருந்தன.

#### (ஆ) பொதுச் சந்தை வாடகை

i. அநேக காலமாக பொதுச் சந்தை வாடகை நிலுவையான ரூபா9,183,603 அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

ii. அநேக காலமாக மாட்டிறைச்சிக் கடை வரி நிலுவையாகிய ரூபா 3,961,767 அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

iii. அநேக காலமாக மீன் கடைவரி நிலுவையாகிய ரூபா 13,695,005 அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

iv. பதவியணியினருக்கு வழங்கப்பட்ட மிதி வண்டி நிலுவைத் தொகையான ரூபா 2,412,863 அறவிடப்பட்டிருந்தது.

**(இ) கடன்களும் முற்பணங்களும்**

i. பதவியணியினருக்கும் ஏனைய நிறுவனங்களுக்கும் வழங்கப்பட்ட ரூபா 33,404,330 கூட்டுத்தொகையுடைய முற்பணம் நெடுங்காலமாகத் தீர்த்து வைக்கப்படாதிருந்தது.

ii. இளைப்பாறிய, மரணமடைந்த, இடமாற்றத்திற்கான உத்தியோகத்தர்களிடமிருந்து வருமதியாக உள்ள ரூபா 12,161,423 கூட்டுத்தொகையுடைய கடன் மீதிகள் கடந்த பல ஆண்டுகளாக அறவிடப்படாதிருந்தன.

iii. இலங்கை மின்சார சபைக்குத் செலுத்த வேண்டிய தொகையான ரூபா 9,944,208 நெடுங்காலமாகத் தீர்த்து வைக்கப்படவில்லை.

## 2.4 பொருத்தமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பிரதி மாநகர முதல்வருக்கு அலுவலக வாகனம் வழங்கப்பட்டமையால் ஆணையாளரது பாவனைக்கென வாடகைக்குப் பெறப்பட்ட வாகனத்திற்கு ரூபா 44,800 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) சொத்து முகாமைத்துவம்
(ஆ) களஞ்சியக் கட்டுப்பாடு
(இ) வருவாய் நிர்வாகம்
(ஈ) முற்பண அறவீடு
(உ) கணக்கீடு
(ஊ) வாகனங்களைப் பராமரித்தல்

(எ) வைப்புகள்

(ஏ) வரவு, செலவுத்திட்டக் கட்டுப்பாடு